பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

07 04 2026 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா தனது சிவில் அணுசக்தி பயணத்தில் முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாட்டில் வளர்ந்த மாநிலங்களில் முதன்மையான மாநிலமாக தமிழகம் திகழ்வதாக திமுக இளைஞர் அணி செயலாளர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

3. திமுக ஆட்சியில் மின் கட்டணம் கடுமையாக உயர்ந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

4. மக்களுக்கு தரமான இலவச கல்வியும், சுகாதாரமும் வழங்க திமுக அரசு தவறிவிட்டதாக நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் கூறியுள்ளார்.

5. ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை அணி இன்று காசி அணியை எதிர்கொள்ள உள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா தனது சிவில் அணுசக்தி பயணத்தில் முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமுக வலைத்தள பதிவில், இதன் மூலம் தனது அணுசக்தி திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை நோக்கி நாடு முன்னேறியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

கல்பாக்கத்தில் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட முன்மாதிரி அதிவேக அணு உலை, தொடர் அணுக்கரு பிளவு நிலையை எட்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதிக எரிபொருளை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட இந்த மேம்பட்ட அணு உலை, நமது நாட்டின் அறிவியல் திறன் மற்றும் பொறியியல் வலிமையை பிரதிபலிப்பதாக அவர் கூறியுள்ளார்.

அணுசக்தி திட்டத்தின் மூன்றாவது கட்டத்தில், நம்மிடம் உள்ள தோரியம் இருப்புக்களைப் பயன்படுத்துவதற்கான இது ஒரு முக்கியமான மைல்கல் என்றும், இது நாட்டிற்கு பெருமைமிக்க தருணம் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட தாக்கல் செய்யப்பட்டுள்ள வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெற உள்ளது.

வேட்புமனு தாக்கலின் கடைசி நாளான நேற்று அரசியல் கட்சி வேட்பாளர்கள், சுயேச்சைகள் ஏராளமானோர் மனு தாக்கல் செய்தனர்.

மாநிலம் முழுவதும் 5 ஆயிரத்து 72 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மனுக்களை திரும்பப் பெற்றுக்கொள்ள நாளை மறுநாள் கடைசி நாளாகும்.

அன்றைய தினமே இறுதி வாக்காளர் பட்டியலும் வெளியிடப்பட உள்ளது.

<<<<>>>>

நாட்டில் வளர்ந்த மாநிலங்களில் முதன்மையான மாநிலமாக தமிழகம் திகழ்வதாக திமுக இளைஞர் அணி செயலாளர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம் குன்னத்தில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், அஇஅதிமுக ஆட்சிக் காலத்தின்போது

மோசமான நிலையில் இருந்த அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் கடந்த 5 ஆண்டுகளில் சீரமைக்கப்பட்டு தரமான பேருந்துகளுடன் இயக்கப்பட்டு வருவதாக கூறினார்.

தொலைதூர கிராமங்களுக்குக் கூட பேருந்து சேவை செய்து தரப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாதமும் 900 ரூபாய் முதல் ஆயிரம் ரூபாய் வரை மகளிர் சேமிப்பதாகவும் திரு. உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

<<<<>>>>

திமுக ஆட்சியில் மின் கட்டணம் கடுமையாக உயர்ந்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

அரியலூர் மற்றும் பெரம்பலூரில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், வீட்டு வரி 100 சதவீதம் உயர்த்தப்பட்டதாக கூறினார்.

கல்விக் கடன் ரத்து செய்யப்படும், நியாய விலைக் கடையில் கூடுதலாக சர்க்கரை வழங்கப்படும் போன்ற வாக்குறுதிகளையும் திமுக அரசு நிறைவேற்றவில்லை என்றார்.

அஇஅதிமுக ஆட்சிக்கு வந்தால் நியாய விலைக் கடைகளில் தரமான பொருட்கள் வழங்கப்படும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய அரசுடன் பல்வேறு விஷயங்களில் மாநில அரசு முரண்படுவதால் தமிகத்தில் வளர்ச்சித் திட்டங்கள் தடைபட்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

திருப்பூர் மாவட்டம் அவினாசியில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், அஇஅதிமுக ஆட்சியின்போது அத்திக்கடவு-அவினாசி திட்டம் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாக கூறினார்.

மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே அரசு இருப்பதால் ராஜஸ்தான், ஹரியானா, மகாராஷ்டிரா உள்ளிட்ட மாநிலங்கள் விரைவாக வளர்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

மக்களுக்கு தரமான இலவச கல்வியும், சுகாதரமும் வழங்க திமுக அரசு தவறிவிட்டதாக நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் குற்றம் சாட்டியுள்ளார்.

திண்டிவனத்தில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், அரசுப் பள்ளிகளின் நிலைமை மிக மோசமான நிலையில் இருப்பதாக கூறினார்.

மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கை சரியாக பராமரிக்காத காரணத்தால், கொலை, கொள்ளை உள்ளிட்ட குற்றச் செயல்கள் பெருகிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்டங்கள் தோறும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டத்தில் தகுதி வாய்ந்த வாக்காளர்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி தேவாங்கு லட்சினையை மாணவர்கள் காய்கறிகளைக் கொண்டு உருவாக்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Rajasekar - 56 Sec)**

ஈரோடு மாவட்டத்தில் 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் வீடுகளில் இருந்து வாக்களிக்க வசதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கான பணியில் **100** குழுக்கள் ஈடுபட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. கந்தசாமி தெரிவித்தார்.

**(Voice Byte - Kandasamy - 44 Sec)**

<<<<>>>>

சாத்தான்குளத்தில் தந்தை-மகன் கொலை வழக்கில் குற்றவாளிகள் **9** பேருக்கும் மரண தண்டனை விதித்திருப்பதை வரவேற்பதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கூறியுள்ளது.

இந்த வழக்கில் குற்றவாளிகள் தப்பித்து விடாமல் சி.பி.ஐ. அதிகாரிகள் சிறப்பாக விசாரணையை நடத்தி முடித்துள்ளதாக அக்கட்சியின் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் தெரிவித்துள்ளார்.

இதுபோன்ற மரணங்கள் இனி நடைபெறாமல் இருக்க காவல்துறையின் செயல்பாடுகள் ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ஈரான் மீது இன்று கடும் தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது.

------------

அமெரிக்காவின் எச்சரிக்கையை புறந்தள்ளுவதாகவும், ஈரானை மிரட்டி பணிய வைக்க முடியாது என்றும் ஈரான் அரசு செய்தித் தொடர்பாளர் **Khatam Al Ambiya** கூறியுள்ளார்.

------------

உலக சுகாதார தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. இதையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

------------

**100** சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி திருத்தணியில் நேற்று இருசக்கர வாகன பேரணி நடைபெற்றது.

------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் தபால் வாக்கு பெற நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பு மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி சிவசௌந்தரவல்லி தலைமையில் நேற்று நடைபெற்றது.

------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் **100** சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி சங்கராபுரம், சௌந்தவல்லிபாளையம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

------------

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூரில் நேற்று துணை ராணுவ படையினர் அணிவகுப்பு பேரணி நடத்தினர்.

------------

மன்னார்குடி ராஜகோபால சுவாமி கோயில் பங்குனி உற்சவத் திருவிழாவின் நிறைவாக தெப்பத் திருவிழா நேற்று இரவு வெகு விமரிசையாக நடைபெற்றது.

------------

சென்னையில் தேர்தல் பறக்கும் படையினர் நேற்று நடத்திய திடீர் சோதனையில் உரிய ஆவணமின்றி கொண்டு செல்லப்பட்டு **11** லட்சத்து **61** ஆயிரம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டது.

------------

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் சென்னை அணி இன்று காசி அணியை எதிர்கொள்ள உள்ளது.

இந்தப் போட்டி இன்றிரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

-------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தா - பஞ்சாப் அணிகளுக்கு இடையேயான ஆட்டம் மழையால் ரத்து செய்யப்பட்டதால் இரு அணிகளுக்கும் தலா ஒரு புள்ளிகள் வழங்கப்பட்டது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற போட்டியில் டாஸ் வென்று முதலில் விளையாடிய கொல்கத்தா அணி, 3 புள்ளி 4 ஓவரில் 2 விக்கெட் இழப்புக்கு 25 ரன் எடுத்திருந்த நிலையில் மழை காரணமாக ஆட்டம் தடைபட்டது.

பின்னர் தொடர்ந்து மழை பெய்ததால் ஆட்டம் ரத்து செய்யப்பட்டு இரு அணிகளுக்கும் புள்ளிகள் பகிர்ந்தளிக்கப்பட்டது.

**<<<<The End>>>>**